## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 23/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. இராஜா முகமது, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873-ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **26**-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 26.11.2024**

**பெயர் - ஹரிதாஸ்**

**த/பெ - தேவராஜ்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.48 எ.எம்**

**குறுக்கு விசாரணை**

1. இதற்கு முன்பு இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க நான் வந்துள்ளேன் என்றால் வந்துள்ளேன். அது அசல் வழக்கு எண் 10/2021 என்ற வழக்கிற்காக என்றால் சரிதான். இவ்வழக்கின் எண் என்ன என்றால் அசல் வழக்கு எண் 23/2022. இவ்வழக்கு யார், யார் மீது நான் தக்கல் செய்துள்ளனே் என்றால் தாஸ், பாரி, ரமேஷ், பங்கஜம்மாள் மற்றும் ரமேஷின் மனைவி மற்றும் பாரியின் மனைவியின் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என்ன பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் இடத்தில் பிரச்சினை செய்யக்கூடாது, தொந்தரவு செய்யக்சுடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை அராசாங்க அதிகாரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கினை மாவட்ட ஆட்சியர் , வட்டாச்சியர், கோட்டாச்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மற்றம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. மேற்படி அரசு அலுவலர்களுக்கு அரசாங்க நிலத்தையோ, தனியார் நிலத்தையோ ஆய்வு செய்வதற்கு அதிகாரம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 511/17-ல் 37 சதுர மீ. நிலமும், 511/14 என்பது 511/14-எ மற்றும் 511/14-பி என் பிரிந்தது அவை மொத்தம் 66 சதுர மீ. பரப்பளவு கொண்டது. 511/13-ல் 55 சதுர மீ. நிலமும், 155/3-எ வில் 218 சதுர அடி நிலமும், 155/4-பி ல் 2.50 ஏர்ஸ் நிலமும், 155/5-பி ல் 2.75 ஏர்ஸ் நிலமும் ஆகும். நான் தற்போது 6 சர்வே எண்கள் மட்டுமே தெரிவித்துள்ள நிலையில் வழக்கில் 7 அட்டவணை சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 7 அட்டவணை சொத்துக்களுக்கும் தனித்தனியாக நான்கெல்லை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஆனால் இவ்வழக்கில் மொத்த சொத்திற்கும் ஒரே நீதிமன்ற கட்டணம் தான் செலுத்தியுள்ளேன் என்றும் தனித்தனியாக செலுத்தவில்லை என்றும் கூறினால் எனக்கு சரியாக தெரியவில்லை. இவ்வழக்கில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அந்த பதிலுரையில் பிரதிவாதிகள் நீதிமன்ற கட்டணம் குறித்து கேள்வி எழுப்பி உள்ளனர் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனது கிராமத்தின் பெயர் பள்ளிப்பாளையம் என்றால் சரிதான். அது சேலியம்பேடு ஊராட்சிக்கு உட்பட்டது என்றால் சரிதான். பள்ளிப்பாளையம் கிராமத்தில் ஒரு சமூகத்தினர் மட்டுமே வசிக்கின்றனர் என்றால் சரிதான். பிற சமூகத்தினர் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. கிராமத்தின மொத்த தளைக்கட்டு எவ்வளவு இருக்கும் என்றால சுமாா 150 வீடுகள இருக்கும சரியாக தெரியவில்லை. இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துக்களும் கிராமநத்த நிலங்கள் என்றால் கிமநத்த நிலங்களும் உள்ளது. பட்டா நிலங்களும் உள்ளது.

4. கிராமத்தில் சுமார் 10-ற்கும் மேற்பட்ட வகையறாக்கள் வாழ்ந்து வந்தனர் என்றால் எனக்கு தெரியாது. அந்த வகையறாக்களை குறித்து பிரதிவாதிகள் பதிலுரையில் 3-ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் நான் பதிலுரையை முழுவதுமாக படிக்கவில்லை எனக்கு அது குறித்து தெரியாது.

எனக்கு வகையறாக்கள் குறித்து தெரியாது. மேற்படி பதிலுரையில் உள்ள சங்கதிகளை மறுத்து நான் எதிர் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞர் பதில் தாக்கல் செய்தாரா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 12.10 பி.எம்.**